DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 79/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திரு.யோபு சம்பத்ராஜன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th November 2025.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருவேங்கடம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவேங்கடம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த கிருஷ்ணகுமார் இறந்துபோய்விட்டதால் வழக்கு ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.06.2012 ம் தேதி 19.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணகுமார் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சரவணன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து அதன்தன்மைக்கேற்ப திருவேங்கடம் காவல்நிலையக் குற்ற எண்.219/2012, ச/பி.294(பி), 341, 323, 506(1) இதச படி முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினைவிசாரணைக்கு எடுத்துக் கொண்டு 24.06.2012ம் தேதி 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் உடையார் மற்றும் மகேஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் சரவணன், ரேணுகா என்ற சாரதா, விஜயதுரை, உடையார், மகேஸ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 25.06.2012ம் தேதி 12.00 மணிக்கு எதிரி முத்துப்பாண்டி என்பவரை பெருங்கோட்டுர் பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்து நீதிமன்றக்காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். எதிரிகள் ராமராஜ், கிருஷ்ணன், மஞ்சு ஆகியோர்கள் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை அரசு மருத்துவர் கார்த்திக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். அத்துடன் விசாரணை முடித்து 29.06.2012ம் தேதி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

அ.சா.1 சரவணன் போலீசார் விசாரணையில் தனது இடது கையை பிடித்துக்கொண்டிருந்த கிருஷ்ணனை தான் தடுத்தபோது தனக்கு உள்ளங்கையில் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. பார்வை மகஜரில் சம்பவ இடத்தில் கம்பு இருந்ததாக துலங்காது என்றால் சரிதான். அ.சா.ஆ.2 காயச்சான்றில் சிகிச்சைக்கு சென்ற சரவணன் தான் அருவாளால் தாக்கப்பட்டதாக குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். நான் முதல் விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், புகார் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்படவில்லை என்றாலும்,

சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றாலும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றாலும், காயச்சான்றிதழ் பெறப்படவில்லை என்றாலும், 1வது எதிரி நான் முதல்விசாரணையில் கூறியவாறு கைது செய்யப்படவில்லை என்றாலும், வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**